மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : மனைகள் வாங்குவது விற்பது என்பவற்றில் எனக்கு அனுபவம் இல்லை. அதைப்பற்றிய தகவல்களை பிறகு விசாரிக்கிறேன்.

அகில இந்திய காங்கிரஸ் தலைவர்

*24 வினா.—**திரு. கரு. சீமைச்சாமி:** மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அகில இந்திய காங்கிரஸ் தலைவர் திரு. காமராஜ் அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் (Security Officer) செலவையும் அந்தரங்க எழுத்தர் (Personal Clerk) செலவையும் தமிழ் நாடு அரசு ஏற்றுக்கொள்கிறதா ?

(இ) ஆம் என்றால் விபரம் என்ன ?

THE HON. THIRU C. N. ANNADURAI : (*a*) & (*b*) As regards the personal Clerk of Sri Kamaraj, President of the All-India Congress, the answer is in the negative.

As regards the alleged security arrangements for Sri Kamaraj, it is not desirable in the public interest to discuss details relating to security precautions taken in respect of political leaders and other V.I.Ps. on the floor of the Assembly.

DR. H. V. HANDE : May I know on what basis these security arrangements are made and the arrangement that is made for giving security to the leaders of other political parties?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தக் கேள்வியை அனுமதிக்க முடியாமல் இருப்பதைப்பற்றி நான் மிகவும் வருத்தப்படுகிறேன். 'மேஸ் பார்லிமெண்டரி ப்ராக்டீசில்' 351-வது பக்கத்திலே "An answer to a question cannot be insisted upon if the answer is refused by the Minister on any ground and the Speaker must refuse to allow supplementary questions under these circumstances." என்று இருக்கிறது. ஆகவே, என்னுடைய கடமையைச் செய்கின்ற வகையில் துணைக் கேள்விகளை நான் அனுமதிக்க முடியாமல் இருப்பதற்கு வருந்துகிறேன்.

Industrial Estates in Tirunelveli district

*25 Q.—THIRU D. S. AUTHIMOOLAM : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state the names of the revenue divisions selected in Tirunelveli district for the location of industrial estates?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள நான்கு வருவாய்த் துறைக் கோட்டங்களில், திருநெல்வேலி (பேட்டை), கோவில்பட்டி (கோவில்பட்டி),